**இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் - 2017**

---

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானங்கள் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2018 ஜுலை 05 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவதம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துதல் எனது பொறுப்பாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில், அகல் விரிவான வருமானங்கள் கூற்றில் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நிச்சயிக்க முடியாதுள்ளளேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

---

இவ்வறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

(i) நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம், நியமம் ஒன்றின் மூலம் தேவைப்படும் அல்லது அனுமதி வழங்கியுள்ள சந்தர்ப்பம் தவிர சொத்துக்கள் பொறுப்புகளுக்கு பதிலீடு செய்து காட்டப்படக் கூடாது எனினும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர்களின் வரவு மீதி ஆகிய ரூபா 169,871,122 தொகைக்கு அத்திகதியில் உள்ளவாறு கடன்பட்டோரின் ரூபா 286,918 இற்கான செலவு மீதி பதிலீடு செய்து தேறிய கடன்பட்டோர் ரூபா 169,584,204 தொகை என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ii) 5 வருட காலத்திற்கு தற்காலிகமாக சாட்டப்பட்டிருந்த சலுகலவிற்கு உரிய கட்டமொன்றினை அபிவிருத்தி செய்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 2,746,581 தொகையினை மூலதனப்படுத்துவதற்காக மற்றும் மீளாய்வாண்டில் இருந்து 5 வருடங்களுள் இலாபத்திற்கு எதிராக பதிவழப்பதற்கு நவடிக்கை எடுத்திருந்த போதிலும் நியமத்தின் 117 ஆம் பந்தியின் பிரகாரம் அந்த கணக்கீட்டு நியமத்தை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02

நியமத்தின் 9 ஆவது பந்தியின் பிரகாரம் மருந்துவகைகள் உற்பத்தி செய்வதற்காக பயன்படுததப்படும் தங்க இருப்பின் பெறுமதியினை கிரயம் அல்லது நிகர தேறிய பெறுமதி இரண்டில் குறைந்த பெறுமதியையே காட்ட வேண்டும் எனினும் அதற்கு முரணாக 2012 ஆண்டின் போது பெறுமதி மதிப்பீடு செய்திருந்த பெறுமதி ஆகிய ரூபா 3,912,465 தொகை என கணக்கீடு செய்திருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

மீளாய்வாண்டிற்கான பணிக் கொடை செலவு ஆகிய ரூபா 3,425,836 தொகை நிதிக் கூற்றுகளில் காட்டியிருந்த போதிலும் நியமத்தின் 76 இன் பந்தியின் பிரகாரம், அப்பெறுமதியினை கணித்தல் தொடர்பான அனுமானங்களை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24

நியமத்தில் 17 பந்தியின் பிரகாரம், கூட்டுத்தாபனம் உயர்மட்ட முகாமைத்துவத்திற்கு செலுத்தப்படும் குறுகிய கால ஊழியர் நலன்கள், ஏனைய நீண்டகால நலன்கள் மற்றும் சேவையை முடிவுறுத்தும் போது நலன்கள் தொடர்பாக தகவல்கள் வெளிப்படுத்த வேண்டுமெனினும், மீளாய்வண்டின் போது அவர்களுக்குச் செலுத்தப்பட்ட வேதனங்கள் மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39

(i) நியமத்தின் 63 ஆம் பந்தியின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 169,584,204 தொகைக்கான வியாபாரக் கடன்பட்டோரின் கிரமமாக குறைத்தல் கிரயத்தை அளவீடு செய்யாமல் ரூபா 2,912,820 தொகை அறிவிடமுடியாக்கடன் மற்றும் ஐயக்கடன்களுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 46 ஆம் பந்தியின் பிரகாரம், ஊழியர் கடன் மற்றும் பெறவேண்டிய வெற்றிகரமான வட்டி விகிதாசார முறையினை பயன்படுத்தி கிரமமாக குறைதல் கிரயத்திற்கு காட்டப்ட்டிருந்ததென வெளிப்படுத்தியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் ரூபா 22,944,095 தொகைக்காக ஊழியர் கடன் கிரமமாக குறைதல் கிரயத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

2017 ஜனவாரி 01 திகதியில் உள்ளவாறு மீள் மதிப்பீடு செய்யப்படாத போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுவரும் 5 வாகனங்கள் தெடர்பாக கிரயம் மற்றும் அத்திகதியில் உள்ளவாறு திரண்ட பெறுமானத் தேய்வு முறையே 3,256,967 தொகை மற்றும் ரூபா 3,226,551 தொகை கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

பின்வரும் வித்தியாசங்களுக்கான விளக்கங்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

| | **பேரேட்டின் பிரகாரம் மீதி** | **அட்டவணையின் பிரகாரம் மீதி** | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| விற்பனை வருமானம் | 578,893,084 | 593,369,128 | 14,476,044 |
| கடன்கொடுத்தோர் | 29,968,930 | 31,563,111 | 1,594,181 |

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் விடயங்களுக்கு எதிராக காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்று செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

| | **விடயம்** | **பெறுமதி** | **சமர்பிக்கப்படாத சான்றுகள்** |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | பெறவேண்டிய பெறுமதி | 152,954 | மீதிகளை உறுதிப்படுத்தல்களை. |
| (ஆ) | கடன்பட்டோர் மீதி | 142,018,470 | 31 கடன்பட்மோர் மீதிகள் தெடர்பாக மீதிகளை உறுதிப்படுத்தல்கள். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வெள்ள உதவியாக 1,000 வண்டி உலர் உணவுப் பைகள் நன்கொடையாக வழங்கல் | 1,999,659 | இரத்மலான சதொச நிறுவனதத்தில் இருந்து பெற்றிருந்த உலர் உணவுப் பண்டங்களை பெற்றுக் கொண்டதற்காக இடப்பட்டிருந்த கையொப்பங்களுக்காக உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் மற்றும் இந்த விடயத்தில் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்கள் |
| (ஈ) | பச்சை மருந்தவகை இறுதி இருப்பு, பொதி செய்யும் பொருட்கள் மீதி இருப்பு மீதி, முடிவுறாப் பொருட்களின் இருப்பு மற்றும் காகிதாகிகள் மற்றும் பயன்படுத்திய எண்ணை மீதி இருப்பு மற்றும் இயந்திர உதிர்பாகங்களின் மீதி இருப்பு | 200,507,347 | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இறுதி இருப்பு பௌதீக கணிப்பீட்டு அலுவல்கள் கண்காணிப்பு செய்வதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தை பங்கு பற்ற வைக்காமையின் காரணமாக மீதி இருப்பின் பெறுமதிகள் தொடர்பாக திருப்தி அடையக் கூடிய தகவல்கள் |

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 169,584,204 தொகைக்கான மொத்த கடன்பட்டோர் மீதியில் 1.41 சதவீத தொகைக்கான ரூபா 2,394,142 இற்கான 14 கடன்பட்டோர் மீதிகள் 5 வருடங்களை விட கூடுதலான காலம் முதல் 14 பொதுத்துறை அரச நிறுவனங்களில் இருந்து அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட கடன் மீதியாக இருந்ததுடன் அவற்றில் மீளாய்வாண்டின் போது எதுவித பணமும் அறவீடு செய்திருக்கவில்லை .

(ஆ) மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தில் இருந்து மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையிளிருந்து கிடைக்க வேண்டிய 6 வருடங்கள் 7 வருடங்கள் இடைப்பட்ட காலம் முதல் நிலுவையாக காணப்பட்ட ரூபா 76,870 தொகை மற்றும் ரூபா 12,000 தொகை தொடர்பாக பெற்றிருந்த கடன்பட்டோர் மீதிகளின் உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் தீர்ப்பதற்கு எதுவித மீதிகளும் காணப்படவில்லை என அறிவித்திருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த கடன்கொடுத்தோர் மீதி ரூபா 31,563,111 தொகை மீதி, உறுதிப்படுத்தல்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவற்றில் காணப்பட்ட 40 கடன் கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக ரூபா 11,981,221 இற்கன கடன் திருப்பி செலுத்த தாமதக் காலம் 376 நாட்கள் முதல் 1928 நாட்கள் வரை கால வீச்சு ஒன்றினைக் கொண்டிருத்தல் அவற்றின் இடையே ரூபா 2,663,454 இற்கான 4 கடன் மீதிகள் நெருக்கடியான கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏற்பட்டிருந்தது .

(ஈ) கடந்த ஆண்டின் போது வேலை இடைநிறுத்தப்பட்ட 06 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 932,271 இற்கான மற்றும் மீளாய்வாண்டின் போது வேலையை விட்டுச் சென்றுள்ள ஒரு ஊழியரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 18,884 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடன் இணக்கமின்மைகள் சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 08 ஆம் பந்தி | வருடம் ஆரம்பிப்பதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் அவ் ஆண்டிற்காக தயாரிக்கப்படும் பாதீட்டுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெறப்பட வேண்டுமெனினும் மீளாய்வண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு வருடம் தொடங்கி 25 நாட்களின் பின்னரே பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) தாபன கோவையின் II ஆம் அத்தியாயத்தின் பிரிவுகள் 13.1.2 மற்றும் 13.4 மற்றும் 2003 ஜுன் 02 திகதி பீஈடீ 12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 9.3 | II பதவிப் பெயர்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளின் எண்ணிக்கையை மிகைத்து, தகைமைகள் இன்றிய 26 உத்தியோகத்தர்களுக்கு தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக பதில் கடமை நியமனம் வழங்கப்பட்டிருந்தது. பதில் கடமையாற்றும் பதவி ஒன்றில் கூடிய காலம் மூன்று மாதங்களுக்கு இருந்த போதிலும், 09 மாதங்கள் மற்றும் 60 மாதங்களை இடைப்பட்ட காலம் அந்த 26 உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமை படியாக 2013 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31திகதி வரையான காலப்பகுதியில் கூட்டுத்தொகை ரூபா 2,237,571 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 103 | 2007 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரையான காலப்பகுதியில் இணங்கண்டிருந்த ரூபா 13,472,021 தொகைக்கான இருப்பு குறைவு தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தொடர் செயல் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டிருக்காததுடன் அக் காலப் பகுதியில் இனங்கண்டிருந்த ரூபா 16,225,809 தொகைக்கான இருப்பு மிகையினை ஏடுகளுக்கு எடுப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (ii) | நிதிப்பிரமானம் 237(இ) | (i) கடமைப் பிரயாணங்களுக்காக இணைந்த படிகள் செலுத்துவதற்கு பதிலாக தங்குமிடம் மற்றும் உணவுக்காக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரினால் தனிப்பட்ட முறையில் செலவிடப்பட்ட ரூபா 35,364 தொகை கூட்டுத்தாபனத்தின் செலவு ஒன்றாக கணித்து மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் சேவைகள் மற்றும் செலவுகளுக்காக அதிகாரம் அளிக்கும் மற்றும் அதிகாரமளிக்கும் அங்கீகரிக்கும் உத்தியோகத்தரின் சான்றிதழ் அல்லது அங்கீகாரம் மற்றும் கட்டளையை உறுதி சீட்டில் அல்லது உரிய பற்று சீட்டில் குறிப்பிட்டிருக்காமல் அந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.<br><br>(ii) நிமித்த கட்டுநிதிகள் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்த 07 வேலைகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 53,620 தொகைக்காக உரிய பில்பத்திரங்களுக்கு பதிலாக போலியான பில்பத்திரங்கள் சமர்பித்த போதும் கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது. |
| | (iii) | நிதிப்பிரமாணம் 371 (ஆ) மற்றும் 2015 ஜுலை 14 திகதி 03/2015 இலக்க பொது நிதி சுற்றறிக்கை | நிமித்த கட்டு நிதி பெற்றிருந்த போது பெற்றிருந்த கருமம் பூர்த்தியடைந்த உடனேயே கட்டு நிதியைத் தீர்க்க வேண்டியிருந்த போதிலும், கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் 20 ஊழியர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 186,483 இற்கான நிமித்த கட்டுநிதிகள் 2018 மார்ச் 31 திகதி அளவிலும் தீர்த்திருக்காததுடன் அத்திகதி வரை தாமதக் காலம் 01 மாதம் முதல் 28 மாதங்கள் வரையான காலவீச்சினை கொண்டிருந்தது. |
| | (iv) | நிதிப்பிரமாணம் 392(ஆ) | 2017 நவம்பர் 20 திகதி பணிப்பாளர் (மருந்து வகை வழங்கல்) இன் எழுதப்பட்டிருந்த ஆனால் பின்னர் காணாமல் போயிருந்த ரூபா 399,360 இற்கான காசோலை தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீள் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 983,174,296 தொகைக்கான ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1.3 | கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த நாளாது வரை ஆக்கப்பட்டிருந்த கூட்டினைந்த திட்டத்தில் மற்றும் வருடாந்த பாதீட்டில் பிரதி ஒன்று மீளாய்வாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சுக்கு, பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கபட வேண்டுமெனினும், அத் தேவைக்கு முரணாக 2017 ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் பாதீடு மீளாய்வாண்டு ஆரம்பிக்கப்பட்டு 03 மாதங்களை அண்மித்த காலம் தாமதித்து 2017 மார்ச் 20 திகதி சமர்பிக்கப்பட்டிருந்தது. |

## 2.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1994 ஜுன் 14 திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரவை, பொது நிருவாக அமைச்சு அல்லது திறைசேரியினால் அறுதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்த நலன்கள் மாத்திரம் தமது நிருவாக சபைகளின் அங்கீகாரத்துடன் தனது ஊழியர்களுக்கு செலுத்துவதற்காக கூட்டுத்தாபனங்களுக்கு இயலுமாக உள்ளது. கூட்டுத்தாபனம் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி 1997 ஆண்டு முதல் செயற்படுத்தியிருந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு நடைமுறைக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென 2007 நவம்பர் 09 நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் விதித்திருந்த போதிலும் 2018 மார்ச் 28 திகதி அளவிலும் அந்த அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவில் உற்பத்தி கிரயத்தின் அடிப்படையிலான உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு ,தினவரவு கொடுப்பனவு மீதியின் மருத்துவ விடுமுறைக்கான கொடுப்பனவு மற்றும் உற்பத்தி திறன் கொடுப்பனவு ஆக 4 வகையான உளகருவிப்பு கொடுப்பனவு அடங்குவதுடன் சந்தையின் பணவீக்க நிலைமையில் உற்பத்தி கிரயம் வருடாந்தம் அதிகரிப்பதினால் அந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு வருடாந்தம் அதிகரிப்பதினால் ஊகுவிப்பு கொடுப்பனவு முறையொன்றினால் எதிர்பார்க்கும் ஊழியர் வினைத்திறன் அதிகரிக்கும் என எதிர்பார்க்க முடியாது மீளாய்வாண்டின் போது மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளின் போது திறைசேரியின் அங்கீகாரம் ஒன்று இன்றி செலுத்தியிருந்த மொத்த ஊக்குவிப்பு கொடுப்பனவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 307,785,384 ஆகும்.

(ஆ) 1987 நவம்பர் 19 திகதி முதல் இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தில் உள்ளார்ந்த நிருவாகங்கள் மற்றும் நிருவாக பிரமாணங்கள் உட்படுத்தி விடுமுறை செயற்படுமுறைமையொன்று தயாரித்து செயற்படுத்தியிருந்த போதிலும் அதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றிருக்காமையினால் அந்த விடுமுறை செயற்படுமுறைக்குப் பதிலாக 2009 ஜனவரி முதல் தாபனக்கோவை, நிதிப் பிரமாணங்கள், மற்றும் ஏனைய உரிய சுற்றறிக்கைகளை கடைபிடிக்கப்பட வேண்டுமென 2009 பெப்ரவரி 16 ஆம் திகதி பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. எனினும் தாபனக் கோவை நிதிப்பிரமாணங்கள் மற்றும் ஏனைய உரிய சுற்றறிக்கைகளை கடைபிடிக்காமல் அதற்க பதிலாக திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றிருக்காத விடுமுறை செயற்படு முறையின் பிரகாரம் சேமிக்கப்பட்டுள்ள மருத்துவ விடுமுறைகளுக்காக 2012 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை விடுமுறை கொடுப்பனவு ஆக கூட்டுத்தொகை ரூபா 18,292,241 தொகை கூட்டுத்தாபனத்தினால் உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவும்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவு ரூபா 43,656,859 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டில் மிகை ரூபா 35,630,966 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வண்டின் மிகை ரூபா 8,025,893 இனால் வளர்ச்சியடைந்திருந்தது. வருமான வரிச் செலவு ரூபா 4,954,202 இனால் அதிகரித்திருந்த போதிலும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விற்பனவுகள் ரூபா 12,530,504 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வளர்ச்சி முக்கிய காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 30,978,577 இற்கான மிகை 2014 ஆண்டின் போது ரூபா 7,968,428 தொகை வரை குறைந்து 2015 ஆண்டின் போது ரூபா 41,058,076 தொகை வரை மீண்டும் அதிகரித்திருந்தது. 2016 ஆண்டின் போது ரூபா 35,630,966 தொகை வரை குறைவடைந்த மிகை 2017 ஆண்டின் போது ரூபா 43,656,859 தொகை வரை அதிகரித்திருந்தது.நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் நடைமுறை அல்லாத சொத்துகளுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் வரி செலவவுகளை மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 156,301,920 தொகைக்கான பங்களிப்பு தொகை தளம்பளுடன் 2017 ஆண்டளவில் ரூபா 260,300,385 தொகை வரை வளர்ச்சியடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மொத்த இலாப விதிதாசாரம் மற்றும் தேறிய இலாப விகிதாசாரம் 1.87 சதவீதத்தினால் மற்றும் 1.25 சதவீதத்தினால் குறைந்த சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் நடைமுறை விகிதாசாரம் 2.87 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினால் உட்படுத்தியிருந்த மதிப்பீட்டு கிரயம் ரூபா 100 மில்லியன் தொகைக்கான 9 மூலதனச் செயற்பாடுகளைப் போலவே ரூபா 30,994,032 தொகை செலவிடப்பட்டு 1.055,572 கண்ணாடி போத்தல்கள் கொல்வனவு செய்வதன் மற்றும் ரூபா 3,898,000 தொகை செலவிடப்பட்டு 900,000 போத்தல் மூடிகள் கொள்வனவு செய்யும் பெறுகைகள் மீளாய்வாண்டிற்கான என்பன பெறுகை திட்டத்தில் உள்ளடங்கியிருக்கவில்லை. மேலும் பச்சை மற்றும் உலர்ந்த மருந்துகள். எண்ணெய் மற்றும் திரவ வகைகள் மற்றும் பொதி செய்ய பொருட்கள் கொல்வனவு செய்யும் எண்ணிக்கை மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2014 பெபப்ரவரி 17 ஆம் திகதி 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நாளதுவரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, ,அங்கீகரிக்ப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் வருடாந்த செயற்பாட்டு திட்டம் மற்றும் கால சட்டகம் மற்றும் எதிர்பார்த்த முடிவுகள் / விளைவுகள் ஆகிய விபரங்களும் திறைசேரியின் ஏற்பாடுகளுடன் வரையறுக்கப்பட்ட செயற்பாடு தவிர கூட்டுத்தாபனத்தின் நிதியத்தில் இருந்து செலவிடுவதற்கு எதிர்பார்த்துள்ள மூலதனச் செலவுகள் செய்ய நடவடிக்கை திட்டத்தில் அடங்கியிருக்கவில்லை. அதே போல செயல் நடவடிக்கை திட்டத்திற்கு ஒத்ததாக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்திருக்கவில்லை.

### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனதத்தின் உற்பத்தி திட்டத்தில் மற்றும் விற்பனைத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள திட்டங்களை அமுல் நடாத்துதல் தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளில் கருமங்களை மதிப்பாய்வு செய்வதற்காக செயலாற்றுகை சுட்டிகள் நிறுவப்பட்டு அவ் விடயங்களின் செயலாற்றுகையை மீளய்வு செய்தல் ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த மதிப்பீட்டு கிரயம் ரூபா 100,000,000 தொகைக்கான 9 மூலதனச் செயற்பாடுகளில் செயற்பாடுகள் ஏதும் 2018 மார்ச் 28 திகதி அளவில் பூரத்தி செய்து கொள்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த உற்பத்தி திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்த உற்பத்தி , உள்ளவாறான உற்பத்தி மற்றும் முரண் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கெள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த உற்பத்தி திட்டத்தின் பிரகாரம், புதிய உற்பத்தி அல்லாத 09 உற்பத்திகளின் திட்டமிடப்பட்ட வருடாந்த மருந்து பொருட்கள் 69,201 கிலோ கிராம்கள் மற்றும் 750 மில்லீற்றர் 654,415 போத்தல்களாக இருந்த போதிலும், உள்ளவாறான உற்பத்தி 65,815 கிலோ கிராமும் மற்றும் 750 மில்லீற்றர் 453,804 போத்தல்களாகும் . அதன் பிரகாரம் எதிர்பார்த்த வருடாந்த உற்பத்தி முறையே 3,386 கிலோ கிராம் மற்றும் 750 மில்லி லீற்றர் 200,611 இனால் நெருங்க முடியாதிருந்தது. அதேபோல், இந்த 09 உற்பத்தி பொருட்களுக்குமான எதிர்பார்த்த உற்பத்திக் கிரயம் ரூபா 303,341,030 தொகை எனினும், உள்ளவாறான உற்பத்திக் கிரயம் ரூபா 324,033,605 தொகையாக காணப்பட்டமையால் பிரதிகூலமாக முரண் ரூபா 20,692,575 தொகையாகக் காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த உற்பத்தி திட்டத்தின் பிரகாரம், 20 புதிய உற்பத்திகள் திட்டமிடப்பட்ட வருடாந்த மருந்து பொருட்கள் உற்பத்தி 21,337 லீற்றர்கள், 7,370 கிலோ கிராம்கள் மற்றும் 119,866 அலகுகள் எனினும் உள்ளவாறாக உற்பத்தி 8,051 லீற்றர்கள் 3,396 கிலோ கிராம்கள் மற்றும் 146,569 அலகுகளாகும் அதன் பிரகாரம் எதிர்ப்பார்த்த வருடாந்த உற்பத்தி முறையே 13,286 லீற்றர் மற்றும் 3,974 கிலோ கிராம்களினால் நெருங்குவதற்கு முடியாதிருந்தது. எவ்வாறாயினும் அலகுகளாக உற்பத்தி செய்வற்கு திட்டமிட்டிருந்த மருந்துப் பொருட்களில் எதிர்பார்த்த அலகுகளின் எண்ணிக்கையை விட 26,703 அலகுகள் மிகையாக உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த உற்பத்தி திட்டத்தில் அடங்கியிருக்காத ரூபா 3,974,675இற்கான மொத்த உற்பத்தி கிரயத்திற்கான 28 வகையான உற்பத்திகளில் 47,315 அலகுகள், 2,389 லீற்றர் மற்றும் 32 கிலோ கிராம்கள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அதேபோல இந்த 28 வகைகளில் 14 வகைகள் 50 சதவீதத்தை விட கூடுதலான இருப்புக்கள் மீதியாக இருந்தன திட்டமொன்று இன்றி உற்பத்தி செய்யப்பட்டிருந்த இந்த உற்பத்திகள் மேற்கொள்வதற்காக அதிகாரம் பெற்றிருந்ததென உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது உள்நாட்டு மருந்து பொருட்களுக்காக அரச மற்றும் தனியார் துறைகளின் வருடாந்த விற்பனை திட்டம், உள்ளவாறான விற்பனை மற்றும் முரண்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த விற்பனை திட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட விற்பனை வருமானம் ரூபா 929,430,375 தொகை எனினும் அந்த மதிப்பீட்டினை தயாரிப்பதற்கு அடிப்படையான மூலவள தகவல்கள் கணக்காய்விற்காக சமர்பித்திருக்கவில்லை.

(ii) கடந்த ஆண்டின் போது அரச துறையின் மூலம் எதிர்பார்த்த விற்பனை வருமானத்தில் நெருங்க முடியாதிருந்த வருமானம் ரூபா 154,667,424தொகை அதாவது 26 சதவீதமாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது நெருங்க முடியாதிருந்த அந்த வருமானம் ரூபா 79,984,655 தொகை அதாவது 15 சதவீதம் வரை குறைந்திருந்தது. அதே போல் கடந்த ஆண்டு தனியார் துறையின் மூலம் எதிர்பார்த்த வருமானத்தில் நெருங்க முடியாதிருந்தது. ரூபா 280,633,384 தெகை அதாவது 69 சதவீதமாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது நெருங்க முடியாதிருந்த அந்த வருமானம் ரூபா 256,076,592 தொகை அதாவது 67 சதவீதம் வரை குறைந்திருந்தது. நெருங்க முடியாதிருந்த வருமானத்தின் சதவீதம் குறைவடைதல் சிறந்த போக்கு ஒன்றாக இருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் எதிர்பார்த்த விற்பனவு வருமானம் முறையே ரூபா 47,158,525 இனால் மற்றும் ரூபா 26,682.565 இனால் குறைவாக திட்டமிடப்படல் அதற்கு காரணமாக உள்ளது.

(iii) மீளாய்வாண்டின் போது அரச துறைக்கு 100 உற்பத்தி வகைகளில் 40,230 அலகுகள் மற்றும் 54,032 மில்லி லீற்றர்கான கேள்வியினை பூர்த்தி செய்ய முடியாமையின் காரணமாக கூட்டுதாபனம் இழந்துள்ள வருமானம் ரூபா 106,695,025 தொகையாகக் காணப்பட்டதுடன் கடந்த ஆண்டின் போது அவ்வாறு இழந்திருந்த வருமானம் ரூபா 93,933,125 தொகை ஆகும். சந்தைப்படுத்தலை மேம்படுத்தும் முயற்சி ஒன்று இன்றி அரச துறையில் இருந்து கிடைக்கும் இந்த கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணத்தினால் நிலையான சந்தையின் பங்கினை கைவிடவேண்டிய ஆபத்து ஒன்று காணப்பட்டது.

(உ) 1969 மே 11 ஆம் திகதி 14,853/3 ஆம் இலக்க இலங்கை அரசாங்க அதி விஷேட வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள அறிவித்தலின் பிரகாரம், ஆயுர்வேத மருந்துவகை உற்பத்தி செய்வதற்கு தேவையான சுத்தமான வெண்ணையை உற்பத்தி செய்வதற்காக சுத்தமான பசும் பால் பெற்றுக் கொள்வதற்கான பால் பண்ணைகள் நடத்துவது மற்றும் மருந்து வகைகள் தயாரித்தலுக்காக தேவையான தேன் உற்பத்தி செய்தல், தேனீ வளர்ப்பு மற்றும் தேனீ வளர்ப்பை வீட்டுக் கைத்தொழில் ஒன்றாக அபிவிருத்தி செய்தல் ஆகிய முக்கிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 10 புதிய மருந்து உற்பத்தி வகைகளை திறந்த சந்தைக்கு அறிமுகம் செய்து அதனை சந்தையில் பிரசித்திபடுத்தும் செயற்திட்டத்தின் முதல் கட்டமாக ரூபா 7,521,992 தொகை செலவிடப்பட்டு ரிஷிகளின் மருந்துவகை வெளியீடு என விழா ஒன்று 2015 ஆண்டின் போது நடாத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மொத்தச் செலவில் 71 சவீதம் அதாவது ரூபா 5,399,970 தொகை பிரச்சார அலுவல்களுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் புதிய உற்பத்தி பொருள் ஒன்றினை மாத்திரம் அறிமுகப்படுத்தியிருந்ததுடன் 09 பழைய உற்பத்தி பொருட்களை பொதியிடலை நவீன மயப்படுத்தி சமர்பிக்கப்பட்டிருந்தது.

(ii) பாரம்பரிய ஆயுர்வேத மருந்து வகைகளை சந்தைபடுத்தும் அரச சந்தையினை பாதுகாத்து கொள்வதுடன் பகிரங்க சந்யையில் சந்கைளை பெற்றுக் கொள்வதன் மூலம் புதிய உற்பத்திகளின் ஊடாக கூட்டுத்தாபனத்தின் விற்பனை வருமானத்தை 50 சதவீதத்தினால் அதிகரிப்பது எதிர்பார்கப்பட்ட போதிலும் 2014 ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆண்டின் போது 17 சவீதத்தினால் மாத்திரம் அதிகரித்திருந்த விற்பனவு வருமானம் 2015 ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆண்டின் போது 9 சதவீதத்தினாலும் 2016 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் போது 04 சதவீதத்தினால் மாத்திரம் வளர்ச்சியடைந்திருந்து.

(iii) செயற்திட்ட பிரேரனையை உள்ளடக்கிய அறிக்கையின் பிரசாரம், ஒவ்வொரு புது உற்பத்தி பொருட்கள் எதிர்பார்த்த ஒட்டுமொத்த வருமானம் மற்றும் செலவினங்கள் முறையே ரூபா 33,000,000 தொகை மற்றும் ரூபா 25,000,000 தொகையாக காணப்பட்டமையால் எதிர்பார்த்த வருடாந்த இலாபம் ரூபா 8,000,000 தொகையாகக் காணப்பட்டது. அவ்வாறாயினும் கணக்காய்விற்குச் சமர்பிக்கபட்டிருந்த தகவல்களின் பிரகாரம், 2015 யூன் முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரையான 02 வருடங்கள் 06 மாத காலப்பகுதியில் இச் செயற்திட்டத்தின் மூலம் உழைத்திருந்த உண்மையான இலாபம் ரூபா 5,968,137 தொகையாக மாத்திரம் காணப்பட்டமையினால் செயற்திட்டதின் குறிக்கோள்களை எதிர்பார்த்த விதமாக நிறைவேற்றிக் கொள்வதற்காக முடியாதிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(எ) விற்பனை மேம்பாட்டு பிரசாரத்துடன் மூலிகை வகைகளின் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பது தெடர்பாக 8 இலட்சம் மக்களிடையில் விளிப்புனர்வினை ஏற்படுத்துவது, சந்தை கணீப்பீடு மேற்கொள்ளல் மற்றும் கடந்த ஆண்டின் விற்பனவு வருமானம் மற்றும் இலாபம் முறையே ரூபா 41,190,000 இனால் மற்றும் ரூபா 10,290,000 இனால் மேம்படுத்தும் குறிக்கோளுடன், நாட்டின் 25 மாவட்டங்கள் அடங்கக்கூடிய விதமாக ஒரு மாதத்தில் குறைந்தளவு 02 மாவட்டங்கள் செயலமர்வுகள் நடாத்தும் செயற்திட்டம் 2016 ஆண்டின் போது இனங்கண்டு அந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவற்காக சுகாதார அபிவிருத்தி நிதியத்திலிருந்து 2016 ஜுன் 09 திகதி ரூபா 10,000,000 இற்கான கடன் ஒன்று பெறப்படட்டிருந்தது. எவ்வாறாயினும் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது 10 மாவட்டங்களில் 33 செயலமர்வுகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அந்தச் செயலமர்வுகள், பொதுவாக விற்பனவு உபாயம் என கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி பொருட்கள் தொடர்பாக விளிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக மாத்திரம் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் என கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. அதேபோல 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் சந்தைக் கணிப்பீடு நடாத்தியிருக்காததுடன் எதிர்பார்த்த விற்பனவு வருமானத்தை மற்றும் இலாபத்தை அதிகரித்துக் கொண்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1973 மருந்தக கட்டளை இலக்கம் 21 இன் பிரகாரம் பொதுமக்களுக்காக விற்பனைகள் செய்வதற்காக உள்ள ஏதேனும் மருந்து ஒன்றின் அனைத்து சுத்திரல்களும் அவ்விடயத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளன. சுத்திரக்குழுவின் மூலம் முதலாவது அங்கீகாரிக்கப்பட்டிருக்க வேண்டுமெனினும், கூட்டுத்தாபனத்தினால் புதிய உற்பத்தி என 2015 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான ஆண்டுகளின் போது சந்தைக்கு அறிமுகப்படுத்தி யிருந்த 12 வகையான மருந்துகள் ஆயுர்வேத திணைக்களத்தின் சுத்திர குழுவின் அங்கீகாரம் 2018 மார்ச் 31 திகதி அளவிலும் பெற்றுக் கொள்ளாமல் சந்தையில் விற்பனவு செய்துள்ளது.

(ஆ) பொதுத் துறைக்கு கடன் விற்பனைக்கான கடன் நிபந்தனைகள் தயாரித்திருக்காததுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 163,274,470 தொகைக்காக பொது துறையில் இருந்து கடன் அறவீடு செய்தல் மிகவும் மந்தமான மற்றும் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(இ) நடமாடும் விற்பனை தொடர்பாக உச்சமட்ட கடன் வரையறை ரூபா 5,000 தொகையாக இருக்க வேண்டுமெனினும் மற்றும் உச்சமட்ட கடன்பட்டோர் காலவரையறை 21 நாட்கள் முதல் 30 நாட்கள் வரை காணப்பட வேண்டும் என 2015 ஜூன் 24 திகதி பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தீர்மானத்திற்கு முரணாக குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறி கடன் விற்பனை நடைபெற்றிருந்தால் 2017 திசெம்பர் 31 திகதி வரை தீர்க்கப்பட முடியாமல் காணப்பட்ட நடமாடும் விற்பனைகளின் மொத்த கடன் மீதி ரூபா 3,799,218 தொகையாக இருந்தது. மேலும் தனியார் துறைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த கடன் விற்பனை தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரண்டு அரச வங்கிகளில் பேணப்பட்டு வரும் இரண்டு நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், 20 வருடங்களை விட மிகையான காலம் முதல் தீர்க்கப்படாமல் காணப்பட்ட வைப்புக்கள் ரூபா 337,010 மற்றும் ரூபா 224,168 தொகைகளாக் காணப்பட்டன. இப் பெறுமதியில் வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தேறப்படாத பணம் ரூபா 22,450 தொகையும், வங்கியில் வைப்புச் செய்யாத பணம் ரூபா 16,633 தொகையும் முன்னர் இருந்து காணப்பட்ட வித்தியாசங்கள் ரூபா 297,927 தொகையும் உள்ளடங்கியிருந்தது இது தொடர்பாக முகாமைத்துவத்தினால் பொருத்தமாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) ரூபா 7,316,876 தொகை செலவிடப்பட்டு யூனானி மருந்துப் பொருட்கள் கொல்வனவு செய்தல் ரூபா 1,513,456 தொகை செலவிடப்பட்டு 2,230 கிலோ கிராம் உலர்ந்த திராட்சை கொல்வனவு செய்தல், ரூபா 168,000 தொகை செயலவிடப்பட்டு 200 கிலோ கிராம் தேன் மெழுகு கொல்வனவு செய்தல் ரூபா 1,995,000 தொகை செலவிடப்பட்டு 1500 கிலோ கிராம் சுத்தமற்ற கூகுள் கொல்வனவு செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக அமைச்சினால் நடத்தப்பட்டிருந்த ஆரம்ப விசாரணையின் அறிக்கைகள் 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்த போதிலும் அது தெடர்பாக அமைச்சின் விசாரணை குழுவினால் வழங்கியிருந்த தீர்ப்புகள் 2018 மார்ச் 31 திகதி அளவிலும் செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) 1976 செப்டம்பர் 06 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிட்டிருந்த கீழே விவரிக்கப்பட்டுள்ள பிரதான மருந்தகக் கட்டளை 08 இற்கு முரணாக மருந்தகங்கள் நடாத்தப்பட்டு காணப்பட்டது.

(i) சிறந்த காற்றோட்டம் மற்றும் சிறந்த முறையில் வெளிச்சம் பெறக்கூடிய விதமாக மருந்தகங்கள் நடாத்தப்பட வேண்டும்.

(ii) மேல் பகுதி சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட மேசைகளை பயன்படுத்தி மருந்து வகைகள் கலவை செய்தல, வெட்டுதல் மற்றும் சுத்தம் செய்தல்

(iii) மருந்துவகைகள் உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் மருந்து பொருட்களை சிறந்த முறையில் கலஞ்சியப்படுத்தல்.

(iv) மலசலகூடங்கள்,குப்பை கிடங்குகள் மற்றும் உர குவியல்களில் இருந்து 50 அடி தூரம் ஏனும் இருக்கும் விதத்தில் மருந்தகங்கள் நடாத்துதல்.

(v) மருந்தகங்களின் சுவர்கள் மற்றும் கூறைப்பகுதி ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள் சாந்து பூசி வெள்ளை ஆக்க வேண்டும்

(vi) மருந்தகத்தின் தரை, சுவர்களில் சுவர் ஓடு பதித்த பகுதி, மேசைகள் மற்றும் ஏனைய பாத்திரங்கள் நாளாந்த கழுவப்பட வேண்டும்.

(vii) தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள அல்லது அண்னயில் பாதிக்கப்பட்டிருந்த உற்பத்திசாலையில் கடமையாற்றும் நபர் ஒருவர் உற்பத்தி சாலையின் உற்பத்தி அலுவல்கள் ஈடுபடாமல் இருப்பதற்காக முறையான சட்டங்கள் ஆக்கப்பட வேண்டும்.

(viii) மருந்து உற்பத்தி விடயங்களில் ஈடுபடுவதற்கு முன்னர் கைகளை கழுவி தொப்பிகள் மற்றும் மார்பகத்தை மூடக்கூடிய வெள்ளை மூடு துணி பயன்படுத்தி உற்பத்திகசாலை மற்றும் உற்பத்தி அலுவல்களை நடாத்துதல்.

(ஊ) மீளாய்வாண்டிற்கான அன்பளிப்புகளுக்கான பாதீட்டு ஏற்பாடுகள் ரூபா 1,500,000 தொகை எனினும் அதனை ரூபா 1,171,622 இனால் மிகைத்து அன்பளிப்புகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(எ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 15 விற்பனை நிலையங்களின் மற்றும் இரண்டு கலஞ்சியங்களில் காணப்பட பயன்படுத்த முடியாத மற்றும் காலவதியாகிய ரூபா 1,949,672 தொகை பெறுமதியாக முடிவுற்ற மருந்துவகை இறுப்பு இலாபத்திற்கு எதிராக பதவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் வருட இறுதியில் மீதியாக காணப்பட்ட இருப்புக்களில் உற்படுத்தியிருந்தது.

## 4.3 செயற்பாட்டுத் தொழிற்பாடுகள்

2010 நவம்பர் மாதம் முதல் பயிர்செய்கை ஆரம்பிக்கப்பட்டிருந்த நிக்கவெரட்டிய மூலிகைத் தோட்டத்தின் 52 ஏக்கர் காணியில் பயிர்செய்கை செய்த மற்றும் பயிர்செய்கை செய்யாத காணியின் அளவு தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்காததுடன் மூலிகை தோட்டத்தில் புதிய மருந்து வகைகளை பயிர்செய்தல், உலர்ந்த மூலிகை வகைகளை பெற்றுக் கொள்ளல் ஆகியவை அடங்கிய அபிவிருத்தி திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 4.4 நிதியக் குறைப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப்பகுதியில் மூலதனச் செலவுகளுக்காக மூலதன மானியங்கள் என திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த ரூபா 206,000,000 தொகையில் 40 சதவீதமாகிய ரூபா 82,785,607 தொகை பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) இரண்டு அரச வங்கிகளில் பேணப்படுகின்ற மூன்று நடைமுறை கணக்குளில் மீளாய்வாண்டின் போது மாதாந்த சராசரி மீதிகள் முறையே ரூபா 43,748,993 தொகை ரூபா 35,411,520 மற்றும் ரூபா 109,946,431 தொகையாகக் காணப்பட்டது. அதே போல 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை விகிதாசாரம் 7.39 தொகை ஆக காணப்பட்டதுடன் தொழிற்படு மூலதன தேவை தவிர மீதியாகக்

காணப்படும் பணத்தை வட்டி வருமானம் கிடைக்க கூடிய குறுகிய கால முதலீடுகளில் வைப்புச் செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**4.5 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத பாதுகாப்பு முன்னோடி பதவிக்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் இன்றி 11 நபர்கள் நிரந்தர அடிப்படையில் மற்றும் ஒருவர் ஒப்பந்த அடிப்படையிலும் சேர்க்கப்பட்டு 2015 ஆண்டு முதல் 2017 ஆண்டுவரை காலப்பகுதியில் கூட்டுத்தொகை ரூபா 10,015,761 தொகை சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியனியினை மிகைத்து மற்றும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி 02 உற்பத்தி உதவியாளர்கள், 03 முகாமைத்துவ உதவியாளர்கள், 04 சாரதிகள் மற்றும் ஒரு தொழிலாளர் 2015 ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டு 2015 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டுத்தொகை ரூபா 21,172,718 தொகை சம்பளங்கள் மற்றும் படிகளை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) எம்ஏ 1–1 சேவை தொகுதியில் சம்பளம் பெறும் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவி வகித்த 03 உத்தியோகத்தர்கள், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்காத உதவி முகாமையாளர்(விற்பனை மேம்பாட்டு) பதவிக்காக 2015 ஜுன் மாதத்தின் போது பதவி உயர்வு வழங்கி ஜேஎம் 1-1 சேவை தொகுதியில் சம்பளம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2015 ஜுன் மாதம் முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை இந்த 03 உத்தியோகத்தர்களுக்கும் சம்பளமாக ரூபா 446,741 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம், பட்டதாரி ஆன பின்னர் அரசாங்கத்தில் அல்லது அரச நிறுவனமொன்றில் 12 வருட சேவை அனுபவமொன்று காணப்பட வேண்டுமெனினும் தொழில் நிலையமொன்றில் 7 வருடகால சேவை அனுபவமுள்ள நபர்களுக்கு விண்ணப்பப்பத்திரங்கள் சமர்ப்பிக்க முடியுமென பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு 2016 ஏப்ரல் 01 திகதி முதல் 2017 மார்ச் 31 திகதி வரை 01 வருட காலத்திற்காக உதவி பொதுமுகாமையாளர் (விற்பனை) பதவிக்காக தொழில் நிறுவனமொன்றில் 7 வருட சேவை அனுபவத்தை உடைய ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேர்கப்பட்டிருந்ததுடன் பின்னர் சேவைக்காலம் 2019 மார்ச் 31 திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(உ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கையை மிகைத்து 26 பதவிப் பெயர்களில் பதில் கடமையாற்றுவதற்காக அப் பதவிக்கு தேவையான தகைமைகள் காணப்படாத 26 பேர் நியமனம் செய்து 2013 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டுத்தொகை ரூபா 2,237,571 தொகை பதில் கடமைப் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம், மனித வள முகாமைத்துவ / சட்டம் / வியாபார முகாமைத்துவம் தொடர்பாக பட்டம், உதவி பொது முகாமையாளர் (நிருவாகம் மற்றும் மனிதவள) பதவிக்கு ஆட்சேர்பதற்கான அடிப்படை தகைமைகளாக இருந்த போதிலும் அந்த அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத கலைப் பட்டதாரி ஒருவர் அப் பதவிக்கு மீளாய்வாண்டின் போது சேர்கப்பட்டிருந்தார்.

(எ) முகாமையாளர் (திட்டமிடல்) மற்றும் முகாமையாளர் (வழங்கள்) ஆகிய இரண்டு பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் இருக்க வேண்டிய பரப்புக்கு உரிய சேவை அனுபவத்தை பூர்த்தி செய்திருக்காத இரண்டு உத்தியோகத்தர்கள் அப் பதவிகள் இரண்டிற்கும் மீளாய்வாண்டின் போது சேர்கப்பட்டிருந்தனர். மேலும் உதவி பொது முகாமையாளர் (நிதி) , பதவிக்கான ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் இருக்க வேண்டிய அரசாங்க சேவையில் அரச நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் பதவி ஒன்றில் குறைந்த அளவு 12 வருட சேவை அனுபவத்தை பூர்த்தி செய்திருக்காத உத்தியோகத்தர் ஒருவர் அந்த பதவிக்கான மீளாய்வாண்டின் போது சேர்கப்பட்டிருந்தார்.

**4.6 சந்தையின் பங்கு**

நிறுவனத்தினால் தனது சந்தையின் பங்கினை தீர்மானிப்பதற்காக காலத்திற்கு காலம் சந்தை ஆய்வு ஒன்று மேற்கொண்டிருக்காததுடன் போட்டி நிறுவனங்களிடையே சந்தையின் பங்கில் குறைவடைதல் அல்லது அதிகரித்தல் ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பாக புரிந்துணர்வு ஒன்று நிறுவனத்திடம் காணப்படவில்லை.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்**

2017 ஆகஸ்ட் 14 திகதி என்ஜீ/எஸ்பீ/எஸ்டிஜீ/17 இலக்கம் கொண்ட தேசிய கொல்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரழின் பிரகாரம், அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ் வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென அறிந்திருக்கவில்லை.

மேற்கூறியவாறு 2030 நிகழ்ச்சி நிரழ் தொடர்பாக கூட்டுத்தாபன அறிந்திருக்காத காரணத்தினால் அந்த கருமங்களுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் இலக்குகளுக்கு நெருங்க வேண்டிய திருப்பு முணைகளும் இலக்குகளை நோக்கி நெருங்குவதை அளவை செய்வதற்காக சுட்டிகளையும் இனங்கண்டிருக்கவில்லை.

**6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த வேலை செயற்பாடு**

**6.1.1 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்கள் 4.2.1 மற்றும் 4.2.2 இன் பிரகாரம் குறைந்த அளவு 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கும் பெறுகை அலுவல்கள் பட்டியல்படுத்தப்பட்டு பிரதான பெறுகை திட்டமொன்று மற்றும் எல்லா பெறுகைகளும் ஆரம்பம் முதல் இறுதி வரையான ஒவ்வொறு பெறுகை செயற்பாடுகளின் கட்டங்களை நேரம்தவராமல் விவரிக்கும் பெறுகைகள் நேரசூசி ஒன்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) மூலிகைக் கூழ் கொல்வனவு செய்வதற்காக இரண்டு வழங்குனர்களுக்கு மீளாய்வண்டின் போது ரூபா 1,893,102 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்ட முறை கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்காததுடன் அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.9.1 இன் பிரகாரம் அவ் இருவருடனும் முறையான உடன்படிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை.

### 6.1.2 ஒப்பந்த நிறுவாகத்தில் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொத்த கிரய மதிப்பீடு ரூபா 139,951,018 தொகைக்கான நான்கு மாடி கலஞ்சிய தொகுதி நிர்மானிக்கும் ஒப்பந்த வேலை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஜூலை 12 ஆம் திகதி முதல் நிர்மானிக்கப்பட்டு வரும் கலஞ்சிய தொகுதி தொடர்பாக 2016 ஜூன் 01 திகதி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஜனவரி 20 திகதி அளவில் நிர்மானவேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிருந்த போதிலும் 2018 மார்ச் 31 திகதி அளவிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.14.1 இன் பிரகாரம் கால நீடிப்பு செய்வதற்காக அங்கீகாரம் பெற்றிருக்காததுடன் தாமதக் கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக நிபந்தனைகள் உடன்படிக்கையில் உட்படுத்தியிருக்காமையினால் தாமதக் கட்டணம் அறவீடு செய்ய முடியாதிருந்தது.

(ii) ஒப்பந்தக்காரரினால் நிர்மான வேலைக்காக பெற்றிருந்த காப்புறுதி அணவல் உறுதி 2017 ஏப்ரல் 30 திகதியளவில் காலவதியாகியிருந்த போதிலும் அதனை புதுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) போதியளவு உடல் நல வசதிகளுடன் நிர்மாண வேலை திட்டமிட்டிருக்காமையின் காரணத்தினால் 28,500 சதுர அடிகள் இடவசதியுடைய நான்கு மாடிகளை கொண்ட ஆரம்ப கட்டிடத்தின் 2 ஆம் மாடியில் மாத்திரம் ஒட்டுமொத்த கட்டிடத்திற்காக 04 மகளிர் மலசலகூடங்கள் மற்றும் 04 ஆண்கள் மலசலகூடங்கள் மாத்திரம் நிர்மானிக்கப்பட்டிருந்தது.

(iv) கூட்டுத்தாபனத்தினால் கொல்வனவு செய்திருந்த 02 நீர் பில்டர்கள், கதிரைகள் மற்றும் மேசைகள் ஊழியர்களின் இலக்கங்களுடனான கபினெட்டுகள் போடப்பட்ட நிர்மானிக்கப்பட் நிலையில் இருக்கும் இந்த கட்டிடத்தில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்தது என 2017 நவம்பர் 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையின் போது வெளிபடுத்தப்பட்டது.

(ஆ) ரூபா 32,000,000 தொகை கிரய மதிப்பீட்டை கொண்ட உற்பத்தி நிலையத்தின் பிரதான கூரையை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்த வேலை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற் கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுகை கைநூலின் வழிகாட்டல் 6.3.6 இன் பிரகாரம், விலைகூறல்களை திறத்தல் தொடர்பான பதிவுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 திசெம்பர் 28 திகதி ஒப்பந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.9.1 இன் பிரகாரம் 2018 பெப்ரவரி 28 திகதி அளவிலும் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்காததுடன் வேலை ஆரம்பிக்கப்பட்டும் இருக்கவில்லை.

(இ) ரூபா 16,310,000 தொகை மொத்த கிரயத்தையுடைய 600 லீற்றர் கொள்திறனை உடைய 2 பொயிலின் பேன்ஸ் 02 இலத்திரன் காய்வு இயந்திரங்கள், 04 கிரனைட் இன அரைக்கும் கற்கள் வழங்கி பொருத்தி செயற்படுத்தும் ஒப்பந்த வேலை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுகைகள் கைநூலில் 6.3.6 இன் பிரகாரம் விலை கூறல்கள் திறத்தல் தொடர்பான பதிவுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 அக்தோபர் 18 ஆம் திகதி ஒப்பந்த வேலை ஒப்படைக்கும் கடிதத்தின் பிரகாரம் 2018 ஜனவரி 18 அனைத்து உபகரணங்களும் வழங்கி பொருத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 பெப்ரவரி 28 திகதி அளவிலும் உபகரணங்கள் வழங்கியிருக்கவில்லை.

(iii) இந்த ஒப்பந்த வேலை தொடர்பாக பெற்றிருந்த செயலாற்றுகை பாதுகாப்புகள் 2018 பெப்ரவரி 26 திகதியும் 2018 மார்ச் 20 திகதியுமாக காலவதியாகின்றது.

(iv) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவைின் வழிகாட்டல் 8.9.1 இன் பிரகாரம், 2018 பெப்ரவரி 28 திகதியளவிலும் ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 1,749,500 மொத்த கிரயத்தையுடைய புதிய கலஞ்சியத் தொகுதி உலர்ந்த மற்றும் பச்சை மருந்துப் பொருட்களை கலஞ்சியபடுத்துவதற்காக 25 ஸ்டென்லஸ் ஸ்டீல் கொல்களன்கள் கொல்வனவு செய்யும் ஒப்பந்த வேலை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுகை வழிகாட்ட கோவையின் வழிகாட்டல் 6.3.6 இன் பிரகாரம் விலைகூறல்களை திறத்தல் பதிவுகள் பேணப்பட்டிருக்காததுடன் வழிகாட்டல் 7.5 இன் பிரகாரம் விலைகூறல் செல்லுபடியாகும் காலப்பகுதியில் 50 சதவீத காலப்பகுதியில் மதிப்பாய்வு குழுவின் அறிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனினும் 27 நாட்கள் தாமதத்தின் பின்னர் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அறிக்கை சமர்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2018 பெப்ரவரி 05 திகதி தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த வேலைகளின் ஆவணங்கள் மற்றும் ஒப்பந்த வேலையை வழங்கிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நியமக் குறியீடுகளில் வித்தியாசங்கள் காணப்பட்டதுடன் அதனை தீர்த்துத் தருமாறு கோரி 2018 பெப்ரவரி 14 திகதி வழங்குனர் கடிதம் ஒன்று அனுப்பியிருந்த போதிலும் கூட்டுதாபனம் அதற்கு பதில் அளித்திருக்காததுடன் உரிய வழங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் 2018 மார்ச் 06 திகதி அளவில் விலைகூறல் பாதுகாப்பின் காலம் முடிவடைந்திருந்தது.

(உ) ரூபா 10,000,000 மொத்தக் கிரய மதிப்பீட்டைகொண்ட பிரதான உற்பத்தி நிலைய கட்டிடத்திற்கு மின்சாரம் வழங்கும் முறைமையினை நவீன மயப்படுத்ததும் ஒப்பந்த வேலை (Designing of new electricity distribution system for the main factory of SLADC) தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிழையற்ற மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகனைத் தயாரிக்காமல் அவசர சந்தர்பம் என கணித்து மிகை மதிப்பீடு ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 10,000,000 இற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா 84,000 தொகை மாத்திரமே.

(ii) அரச பெறுகை வழிகாட்டல் மேலதிகம் 27 இன் பிரகாரம், அங்கத்தவர் ஒருவரை ஒரு தடவையில் 03 தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களை விட கூடுதலாக நியமனம் செய்யக் கூடாது எனினும், கூட்டுத்தாபனத்தினால் இந்த பெறுகை உட்பட 04 பெறுகைகாரருக்கு தொழில்நுட்ப பொறியியலாளர் (சுகாதார அமைச்சு) உதவிப் பொது முகாமையாளர் (தொழிற்சாலை) முகாமையாளர் (நிதி) ஆகிய பதவிகளை வகிக்கும் மூன்று உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

(iii) அரச பெறுகைகள் கைநூலின் 6.3.6 இன் பிரகாரம் விலைகூறல்களை திறத்தல் தொடர்பான பதிவுகள் பேணப்பட்டிருக்காததுடன் பெறுகை ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்வதற்கு ஒரு வருடத்தை விட மிகையான காலம் செலவிடபட்டிருந்தது.

(ஊ) ரூபா 2,533,642 மொத்த கிரய மதிப்பீட்டை கொண்ட 05 வருட காலத்திற்காக தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டிருந்த கட்டிடத்தை பழுதுபார்பதலுக்கான ஒப்பந்த வேலை தெடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.12.2 இன் பிரகாரம் முன்னைய தகைமைகளை பரிசோதனை செய்யாமல் 2017 ஏப்ரல் 20 திகதி முதல் முறையாக வர்த்தக பெயர் பதிவு செய்திருந்த சுமார் 07 மாத கால சேவை அனுபவமுள்ள விலைகூறல் தாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(ii) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.4.4 இன் பிரகாரம், ஏற்றுக் கொள்ளக் கூடிய முற்பண பிணை முறி ஒன்று பெற்றுக் கொள்ளாமல் ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீதமான ரூபா 458,434 இற்கான வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது அதேபோல வழிகாட்டல் 5.4.8 இன் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியில் 5 சதவீதமான ரூபா 126,682 இற்கு செயலாற்றுகை பாதுகாப்பு ஒன்று பெற்றிருக்கவில்லை.

## 6.2 பாதீட்டு கட்டுபாடு

மீளாய்வாண்டிற்காக 06 வருமான விடயங்களில் பாதீட்டு வருமானம் மற்றும் உள்ளபடியாக வருமானத்திற்கு இடையே 8 சதவீதம் முதல் 35 சதவீதம் வரையான வீச்சிலும் 50 செலவு விடயங்களான 15 செலவு விடயங்களில் பாதீட்டு செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே 5 சதவீதம் முதல் 117 சதவீதம் வரை வீச்சிலும் பிரதிகூலமாக முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுபாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.3 தீர்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

கடந்த கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டியிருந்த போதிலும் 2018 ஜுன் 30 திகதி வரை சரிசெய்வதற்காக போதிய கவனம் செலுத்த படாத கணக்காய்வு ஐய வினாக்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) ஆய்வுகூட அறிக்கை மற்றும் மருந்துக் குழு அறிக்கையின் மூலம் இரத்து செய்யப்பட்டிருந்த போதும் ரூபா 1,980,000 தொகை பெறுமதியான 4000 கிலோ கிராம் தேன் 2012 ஜுன் மாதத்தில் தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கொல்வனவு செய்திருந்ததுடன் இந்த கொல்வனவு தொடர்பாக உறுதிச் சீட்டு, பற்றுச் சீட்டு மற்றும் உரிய கோவைகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. 2018 ஜுன் 30 ஆம் திகதி அளவில் தேன் பயன்படுத்த முடியாத நிலைக்கு மாறியிருந்தது.

(ஆ) கூட்டுத்தானத்தில் ரூபா 5,930,284 இற்கான செலவில் உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்த அப்பிரக ஹஷ்ம மற்றும் நாக ஹஷ்ம 200 கிலோகிராம் தொகை ரூபா 7,137,130 தொகை செலவிடப்பட்டு 2012 ஆண்டின் போது இறக்குமதி செய்யப்பட்டமையால் ரூபா 1,206,846 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) புதுடில்லி நகரிலுள்ள உலக சுகாதார அமைப்பு அலுவலகத்தில் சுதேச வைத்திய விவகாரங்களுக்காக அலுவலகம் ஒன்று பெற்று அதனை பழுதுபார்த்தல் மற்றும் அலுவலகம் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 2012 அக்தோபர் 15 திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு ரூபா 3,000,000 இற்கான முற்பணமொன்று வழங்கியிருந்தது. முற்பணம் வழங்கப்பட்டு 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் குறிப்பிட்ட குறிக்கோளை அடைவதற்கு முடியாதிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் அனுபவித்துவரும் காணி ஒன்றில் 2009 ஆண்டின் போது ரூபா 1,808,795 தொகை செலவிடப்பட்டு பாதுகாப்பு வேலி ஒன்று நிர்மானிக்கப்பட்டிருந்ததுடன் உற்பத்தி நிலையம் ஒன்று நிர்மானிப்பதற்கு திட்டமிட்டுள்ள இந்த காணியின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்காக 2017 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | இருப்புக் கட்டுப்பாடு | உச்ச அளவு, குறைந்த அளவு மற்றும் மீள்கட்டளையிடும் இருப்பு மட்டத்தை தீர்மானித்திருந்த போதிலும் அவற்றை செயல்முறையில் செயற்படுத்தியிருக்காமை, இருப்புக்களை ஒழுங்கு முறைப்படி களஞ்சியப்படுத்தாமையால் முன்வந்து முன்செல்லல் முறையின் கீழ் இருப்புக்கள் வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை, வருட இறுதியில் உள்ளவாறு இருப்புக்களின் பெறுமதி புத்தக பெறுமதியின் அடிப்படையில் கணித்த பின்னர் பௌதீக இருப்பின் பெறுமதியுடன் இணக்கஞ் செய்த போது இருப்பு மிகை மற்றும் பற்றாக்குறைகளை நிதிக்கூற்றுக்களில் சீராக்கல்கள் செய்திருக்காமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | களஞ்சிய கட்டுபாடு | போத்தல்கள் கலஞ்சியப்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தியிருக்காமை மற்றும் உற்பத்தி நிலைய கட்டிடத்தில் அசுத்தமான போத்தல்கள் பாரிய தொகையொன்று குவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | கணக்கீடு | கடன் கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்பட்டிரு க்கவில்லை. |
| (ஈ) | செலவினக் கட்டுபாடு | (i) முற்பணப் பதிவேடு முறைசார் விதமாக பேணப்பட்டிருக்காமை, அடிக்கடி பரிசோதனை மேற்கொள்ளப்படாமை மற்றும் அது தொடர்பாக உள்ளக கட்டுபாடுகளை பலப்படுத்தப்படாமை. |
| | | (ii) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அலுவலக பைகள் கொல்வனவு செய்து உரிய உத்தியோகத்தர்களுக்கு பங்கீடு செய்வதற்கு பதிலாக உத்தியோகத்தர்களுக்கு நிமித்த கட்டுநிதி வழங்குதல். |